NOT FOR SALE

Registered as a Newspaper

Niru Tuition
CENTRE
Kondavil.

O/L கலை, மாலை
பகல் முழுநேர வகுப்புக்களும், 10-ம், 9-ம், 8-ம்
7-ம், 6-ம், 5-ம் ஆண்டு
களுக்கான வகுப்புக்களும்
நடைபெறுகின்றது.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை:
ரூ: 1-25

நிரு டியூசன்
சென்ரர்
கோண்டாவில்.

A/L கலை, வர்த்தக
விஞ்ஞான வகுப்புக்கள்

தனித்துவமிக்க ஆசிரியர்
களால் கல்வி கற்பிக்கப்
படுகின்றது

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 8 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 21 (21-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 123

★ 3 உயரதிகாரிகள், பல படையினர் பலி!

# ஒட்டிசுட்டான் முகாமை

## ஈரோஸ் சுற்றி வளைத்துத் தாக்குதல்

### மாங்குளம், பதவியாவுக்கு சிப்பாய்கள் தப்பி ஓட்டம்

### முகாம் கட்டடங்கள் சில தரைமட்டம்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 21

ஒட்டிசுட்டான் இராணுவ பொலிஸ் கூட்டுமுகாமை நேற்று அதிகாலை ஈரோஸ் போராளிகள் சுற்றிவளைத்து திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மூன்று உயரதிகாரிகள் உட்பட பல இராணுவத்தினரும் அதிரடிப் படையினரும் கொல்லப்பட்டனர். பத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

சுமார் ஒருமணி நேரம் இருதரப்பாருக்கும் இடையில் உக்கிரமோதல் நீடித்தது.

நேற்று அதிகாலை வேளையில் நூற்றுக்கணக்கான ஈரோஸ் போராளிகள் ஒட்டிசுட்டான் பொலிஸ், இராணுவ கூட்டு முகாமைச் சுற்றிவளைத்து திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலின்போது போராளிகள் நவீனரக ஆயுதங்களையும் ரொக்கட் லோஞ்சர்களையும் பாவித்தனர்.

போராளிகளின் தாக்குதலினால் பொலிஸ்-இராணுவ கூட்டுமுகாம் பலத்த சேதமடைந்ததாகவும் தெரியவருகிறது. முகாம் கட்டடங்கள் இடிந்துவிழுந்ததாகவும் தெரியவருகிறது.

முகாமின் பிரதம செயலகம், தொடர்பு நிலையம், பிரதான காவல் அரண் ஆகியவை உட்பட பல பகுதிகள் பலத்த சேதமுற்றதாகவும் அறிய வருகிறது.

போராளிகளின் திடீர்த் தாக்குதலினால் நிலைகுலைந்த சிப்பாய்கள் முகாமைவிட்டு வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



கொழும்புக்குப் போற தமிழ்ப் பெடியள் பொலிசுக்குப் பயப்படுறதைவிட அந்நகரசபைக்கு மாரடிக்கிற பேச்சுவழியிலிரை கண்ணில் படாமல் இருக்கவேணும் போல இருக்கு...

### நாவற்குழியில் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 21

நேற்றுக்காலை நாவற்குழியில் இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள தென்னந்தோப்புக்குள் காவல் அரண் அமைக்க வந்த சுமார் 80 சிப்பாய்களை நோக்கி விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் காயமடைந்த சிப்பாய்களை இழுத்துக்கொண்டு ஏனைய சிப்பாய்கள் முகாமுக்கு பின்வாங்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (உ-10)

டிச. 19 யோசனை பற்றி ஆராய

### முஸ்லிம்கள் மாநாடு ஹமீத் ஏற்பாடு

கொழும்பு, ஏப் 21

டிசம்பர் 19 யோசனைகள் பற்றி பரிசீலனை செய்ய வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது முஸ்லிம் தலைவர்கள் மாநாடு ஒன்றுக்கு அழைத்திருக்கிறார்.

இம் மாநாடு எதிர்வரும் வியாழக்கிழமை நடத்தப்படும் என்று தெரியவருகின்றது.

சகல முஸ்லிம் எம். பிக்கள், முஸ்லிம் இயக்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் கிழக்கு மாகாண முஸ்லிம் எம். பிக்களின் தூதுக் குழு ஒன்று புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர் பதியுதீன் மஹ்மூத், டாக்டர் எம். ஸி. எம். கலீல் ஆகியோரும் இத்தூதுக் குழுவுடன் செல்வர் என்றும் தெரிகிறது. (உ-எ)

### சுபநேரம்

21-04-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:-
10-31 முதல் 12-01வரை

ராகுகாலம்:-
3-01 முதல் 4-31 வரை

இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி பிற்பகல் 4 44 வரை

### கோட்டை வேட்டுக்கு நேற்றும் ஒருவர் பலி!

#### மற்றொருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ் கோட்டை முகாமிலிருந்து நேற்று நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் பின்னக்கடைக்கு அருகில் கொல்லப்பட்டார்; கே. கே. எஸ் வீதிக்கு அருகில் மற்றொருவர் காயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த சபாரத்தினம் கனகரத்தினம் (வயது 54) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவராவார்.

கொக்குவிலிலிருந்து மண்டைதீவுக்கு செல்வதற்காக குருநகர் நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது இவர் சூட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

மரணமானவர் நான்கு பிள்ளைகளின் தந்தை.

நேற்று சினைப்பர் தாக்குதலில் காயமடைந்தவர் கே. கே. எஸ். வீதியில் உள்ள சிவகணேசன் ஸ்ரோர்ஸ் முகாமையாளர் கந்தையா ஆறுமுகம் (வயது 35).

காலில் காயமடைந்த நிலையில் இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கே. கே. எஸ். வீதிக்கு குறுக்காக கட்டப்பட்டுள்ள கொங்கிறீட் சுவருக்கு மேலால் வந்த துப்பாக்கிச் சன்னங்களே இவரைத் தாக்கியுள்ளன.

நேற்றுப் பகல் இரண்டு மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

### ஊர்காவல் 'தளபதி' மூதூரில் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஏப். 21

மூதூரில் ஊர்காவல் படையின் 'தளபதி' என்றும் 'டிங்கோ லெவி' என்றும் அழைக்கப்படுபவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருடன் வேறு இரண்டு முஸ்லிம்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது.

காலை 11 மணியளவில் பெரியபாலம் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

காலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றிற்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது டிங்கோ லெவி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. லெவி அந்த இடத்திலேயே மரணமானார்.

எம். கே. எம். ராமதின், எம். எம். சமீர் ஆகியோரும் அந்த இடத்தில் சூடுபட்டு உயிரிழந்தனர். (உ-எ-15)

### கொழும்பில் கைதான தமிழ் இளைஞர் எங்கே?

#### விடுதலையானவர் மாயமானார்

பலாலி, ஏப்ரல் 21

இராணுவத்தால் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்ட ஒருவரைப் பார்க்க அவரது மனைவி கொழும்பு சென்றபோது அவர் விடுவிக்கப்பட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

மகிழ்ச்சி மேலிட யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீட்டுக்கு மூன்று மாதக் கைக்குழந்தையுடன் விரைந்த மனைவி வீட்டிற்குக் கணவன் வராமையால் அதிர்ச்சி அடைந்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள ஏனைய இராணுவ முகாம்களிலும் விசாரித்து விரக்தியடைந்த இளம்தாய் திருமதி இருபாலினி சிவகுமார் இதுபற்றி யாழ். அரச அதிபருடாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைச் சேர்ந்த திரு. பூரணானந்தம் சிவகுமார் (26 வயது) என்பவரே காணமற்போனவராவார். (உ-119)

### யாழ். மக்களை பாதிக்கும் நடவடிக்கைகளை நிறுத்துக

#### ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப் 21

யாழ். குடா மக்களைப் பாதிக்கும் சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளும்படி யாழ் மறை மாவட்டப் பொது நிலையினர் சமூகம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கோரியிருக்கின்றனர்.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை மறைமாவட்டப் பொது நிலையினர் சமூகம் அனுப்பி வைத்துள்ளது.

மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:

மக்களின் சமய, சமூக நிலைப்பாடுகளின் அடிப்படையில் உங்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்க சமூகம் தீர்மானித்துள்ளது.

அதிகரித்து வரும் வன்செயல்களினால் மக்கள் உயிரிழக்கின்றனர். உடைமைகள், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுகின்றன.

தரையிலும் கடலிலும் உள்ள கண்காணிப்பு வலயத்தினால் மீனவர்கள், விவசாயிகள் தமது அன்றாட வாழ்க்கையை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 5 ஆயிரம் படையினர் கிழக்கில் தேடுதல்

கொழும்பு, ஏப். 21

சுமார் ஐயாயிரம் துருப்புக்கள் கிழக்கு மாகாணத்தில் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளன.

தீவிரவாதிகளுக்கு எதிரான முழு அளவிலான தேடுதல் நடவடிக்கை இது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் தமிழ்ப் போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படி சிங்கள இயக்கங்கள் சில அரசாங்கத்தைக் கோரியுள்ளனதாகவும் அறிவிக்கப்படுகிறது.

போராளிகளுடன் சமரசம் எதுவும் செய்ய வேண்டாம் என்று சிங்கள இயக்கங்கள் அரசை வற்புறுத்தி உள்ளனவாம். (உ-எ)

### ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, ஏப் 21

கடந்த ஞாயிறு மாலை 6 மணி தொடக்கம் திருகோணமலை மாவட்டத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டும் இருந்தது. (உ-எ)

### பலியானோர் எண்ணிக்கை 140ஆக உயர்வு

கொழும்பு, ஏப். 21

கடந்த வெள்ளிக்கிழமை கந்தளாய்க்கு அருகில் நடந்த பஸ் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 140 ஆக உயர்ந்துள்ளது.

இப்படி வெரித்தாஸ் வானொலி நேற்று இரவு தெரிவித்தது. (உ-எ)

### 66 பேர் படையினர்

கொழும்பு, ஏப் 21

கடந்த வெள்ளிக்கிழமை கந்தளாய்க்கு அருகில் படுகொலை செய்யப்பட்டவர்களில் 66 பேர் பாதுகாப்புப் படையினர்.

ஏனையோர் அவர்களின் உறவினர்கள்.

–இப்படி தற்போது அறிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களில் கடந்த ஞாயிறுவரை 61 சடலங்களே அடையாளங்காணப்பட்டன. பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் சடலங்களே அவை (உ-எ)

# வான் எலவில் 15 சிங்களவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஏப் 21

திருகோணமலைமாவட்டத்தில் நான்கு நாட்களுக்குள் இரண்டாவது படுகொலைச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

சிங்களக் கிராமம் ஒன்றிற்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அங்கு 15பேரைச் சுட்டுக்கொன்றது.

இத்தாக்குதல் நேற்று அதிகாலை வான் எல, ஜயந்தபுர என்னும் கிராமத்தில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களில் 5 பேர் பெண்கள். ஐவர் குழந்தைகள் ஐவர் ஆண்கள்.

தாக்குதலுக்குள்ளான கிராமம் திருகோணமலையில் இருந்து 80 மைல் தொலைவில் உள்ளது. (உ-எ)

### பஸ், ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்–கொழும்பு பஸ் சேவையும் வவுனியா–கொழும்பு யாழ் தேவி சேவையும் நேற்று வழமைக்கு திரும்பியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹபரணைப் பகுதியில் நடைபெற்ற பஸ், லொறி பயணிகள் கொலைகளை அடுத்து இந்த பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

சனி, ஞாயிறு தினங்களில் குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாததன் காரணமாக மீண்டும் நேற்று முதல் யாழ்-கொழும்பு சிறிய பஸ் சேவைகள் செயல்படத் தொடங்கியுள்ளன.

எனினும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வவுனியா தவிர்ந்த தூர இடங்களுக்கான ஏனைய பஸ் சேவைகள் தொடர்ந்து நேற்றும் நடைபெறவில்லை. (உ-10)

### காங்கேசனிலிருந்து பெருமளவு பொருள்கள் பலாலி முகாம் சென்றன

#### கண்டவர்கள் மீது சூடு!

காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டலில் இருந்த பெருந்தொகையான "பொருள்களை" எடுப்பதற்காகப் பலாலியில் இருந்து வந்த இராணுவம் மாவிட்டபுரம் நோக்கி ரயில்வே தண்டவாளங்கள் வழியாக முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் 27 வாகனங்களிலும், 4 லொறிகளிலும் பெருமளவில் பொருள்களை இராணுவம் பலாலிக்கு எடுத்துச் சென்றது.

நேற்றுக் காலை பலாலியில் இருந்து அதிகாலை 6 மணிக்குப் புறப்பட்ட இராணுவம் தமது புதிய யுக்தியின்படி வீதி வீதியாக சென்று அமைந்த காங்கேசன்துறை இராணுவ முகாமைச் சென்றடைந்தது.

உயரமான இடங்களில் ஏறி நின்ற இராணுவம்

(4ஆம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதிகளுக்கு உறுதுணை நிற்போம்

#### மறுமலர்ச்சிக்கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 21

சிறையில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு உறுதுணையாக நிற்பதன் மூலம், அவர்களுக்கு மனோபலத்தை அளிப்பதுடன் ஸ்ரீ லங்கா அரசின் பொய் முகத்தினையும் வெளிப்படுத்துவோம்.

— இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளிலும், கொடிய வதை முகாம்களிலும் பெரும் சித்திரவதைக்குள்ளாகும் எம்மவர்கள் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து மென்றுவது நடவையாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை குதித்துள்ளனர்.

அடிப்படை வசதிகளான மருத்துவ வசதி, உணவுப் பற்றாக்குறை ஆகியன ஒழுங்கான முறையில் வழங்கப்படாத நிலையில் ஆரம்பித்த இப் போராட்டத்தில் நாமும் சேர்ந்து போராட வேண்டியது கடமையாகின்றது.

கொடூரமான பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கடந்த ஒருவரை 18 மாத காலம் மட்டுமே விசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பல அப்பாவிகளைக் காட்டிக் கொடுத்தவர் இப்போது கொழும்பில்

பலாலி, ஏப் 21

வெளிநாட்டுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக கொழும்புக்குச் சென்ற முல்லைத்தீவைச் சேர்ந்த தேவநாயகம் நியோகுப் பிள்ளை என்ற 25 வயது வடை தமிழ் இளைஞர் ஒருவர் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றார்.

கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் திருப்பிரார்த்தனைக்காகக் காலையில் செல்லும் போது இவரை நன்கு அறிந்தவரும் தற்போது கொழும்பில் வசிப்பவருமான நபர் ஒருவர் இவரைக் கையில் பிடித்துக் கூட்டிச் சென்று இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்ததாகத் தெரியவந்துள்ளது.

இரகசியப் பொலிசாருக்குக் காட்டிக் கொடுக்கவென கவிக்கமர்த்தப்பட்ட குறிப்பிட்ட நபர் சில காலம் வவுனியாவிலும் இராணுவத்துடன் கடமை புரிந்தவரெனக் கூறப்படுகின்றது.

முன்புமுடிக்கடி பலாலி முகாமுக்குச் சென்று வந்த இவரை தீவிரவாதிகள் விசாரித்ததுடன் எச்சரிக்கை செய்து விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இன்றைய சிறு விளம்பரங்கள் ★

**தேவை**

நாரசபை எல்லைக்குள் வர்த்தக விதாபனத்திற்கு பாவிப்பதற்காக வீடு தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும் 9/3, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் அல்லது 224/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (1219)


# கிளிநொச்சிப் பகுதியில் வரட்சி நிவாரணம்

கிளிநொச்சி, ஏப் 21

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராம சேவை சேவையாளர் பிரிவிலுள்ளவர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக குடும்ப அட்டைப் பட்டியல்கள் கிராம சேவகர்களால் தயாரிக்கப்படுகின்றது.

தயாரிக்கப்படும் பட்டியலில் 300 ரூபாவுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கே நடைமுறைப்படுத்தப்படும்.

அதற்காக கீழ் வரும் அடிப்படையில் பட்டியலைத் தயாரிக்குமாறு உதவி அரசாங்க அதிபரால் கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபம் குறிப்பிட்டுள்ளது.

அவையாவன:-

(அ) தொழில் செய்கை அற்ற காணிச் சொந்தக்காரர்கள்.

(ஆ) இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் உள்ளோர்

(இ) விவசாயக் கூலிகள்

(ஈ) மத்திய வகுப்புத் திட்டக் கூலிகள் (இ-76)

## பூஸாவிலிருந்து விடுதலையானவர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு ஏப் 21

பூஸா முகாமிலிருந்து விடுதலையாகிய ஒடும் பஸ்தர் ஒருவர் சில நாட்களில் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

5 பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம் (55 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவரது சடலம் களுதாவளை பிரதான வீதியில் காணப்பட்டது. (இ-81)

## வலி வடக்குப்பகுதி சேதங்கள் குறித்து அறிக்கை தயாரிக்க முயற்சி

காங்கேசன்துறை, ஏப். 21

வலி வடக்குப் பகுதியில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற இராணுவ அசம்பாவிதங்கள் குறித்து முழு விவரங்களையும் உள்ளடக்கிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க வலி வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

வலி வடக்கில் மயிலிட்டி தெற்கு கட்டுவன் குரும்பசிட்டி பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்ற உயிர்ச்சேதம் பொருள் சேதம்' வீடுகள், தொழிற்சாலைகள், ஆலயங்கள் சேதம் ஆகியவை பற்றிய முழு விபரங்களையும் உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளின் பிரஜைகள் குழுக்கள் உரிய விவரங்களைத் திரட்டித் தந்துதவுமாறு ஒன்றியத் தலைவர் சட்டத்தரணி அ. குமரகுரு கோரியுள்ளார்.

இந்த அறிக்கை ஜனாதிபதி, இந்தியத் தூதுவர், வெளிநாட்டுத் தூதுவர்கள், உதவி வழங்கும் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது (உ-68)

### அச்சுவேலியில் இலவசக்கல்வி

பலாலி, ஏப்.21

அச்சுவேலி கல்வி வளர்ச்சிக்கழகம் ஜீ.சி.ஈ. சாதாரணதர, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இலவச வகுப்புகளை நடாத்துகின்றது.

இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்காக விசேஷ போக்குவரத்துச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது (இ-எ-119)

## கைது செய்யப்பட்ட கணவன், மகன் எங்கே?

### பிரசைகள் குழுவிடம் மனைவி புகார்

மட்டக்களப்பு, ஏப் 21

கடந்த வருடம் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட எனது கணவனையும், 9 வயது மகனையும் சுற்றிய தகவல்களை அறிய முடியாமலிருக்கின்றேன் தகவல் கண்டு பெற்றுத் தாருங்கள்.

மேற்கண்டவாறு நவகிரிநகர் வாசியான திருமதி சோமசுந்தரம் என்னும் இளம் குடும்பப் பெண் கல்முனை பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்.

அம்பாறை எல்லைக் கிராமமான நவகிரி நகரில் 21.02 1986 இரவு ஆயுதப்படையினர் கணவர் கே. சோமசுந்தரம் (40வயது) மகன் 3தவதாசன் (9 வயது) ஆகிய இருவரையும் வீட்டில் வைத்து கைது செய்து அழைத்துச் சென்றனர்.

இவர்கள் எங்கே என இதுவரை தகவல் இல்லை. இதனால் தவிக்கிறேன் என இப்பெண்ணின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரஜைகள் குழுத் தலைவர் திரு ஆ. வேல்முருகு அம்பாறை இணைப்பதிகாரிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பவிருப்பதாக தெரிவித்துள்ளார். (இ-81)

## நோய்க்கு சிகிச்சை பெற ஆஸ்பத்திரி செல்ல பயந்தவர் தற்கொலை

சாவகச்சேரி, ஏப். 21

ஷெல் அடிக்குப் பயந்து யாழ் வைத்தியசாலைக்குச்செல்லப்பயந்த நோயாளி ஒருவர் நோயின் வேதனையால் தற்கொலை செய்து கொண்டார்

இச்சம்பவம் மிருசுவிலில் தவசிக் குளத்தில் இடம்பெற்றது

ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையான 41 வயது நா. வேலாயுதபிள்ளை என்பவரே தற்கொலை செய்து கொண்டவர் ஆவர்.

இவர் தமது காலில் உண்டான கட்டி ஒன்றிற்கு சிகிச்சை பெறுவதற்காக யாழ் வைத்தியசாலைக்கு செல்லவேண்டி இருந்தது.

ஷெல் அடிக்குப் பயந்து இவர் வைத்தியசாலைக்கு செல்ல மறுத்துவிட்டார்.

நோயின் உபாதை தாங்க முடியாத இவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவர் தமது தமையனுக்கு எழுதியிருந்த கடிதம் மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

தமையனின், மனைவியின் சாட்சியங்களைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி திரு நடராஜேந்திரன் தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்தார். (இ-எ-31)

## அகதிகளுக்கு உதவ உணவு சேகரிப்பு

கரவெட்டி, ஏப்.21

தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் கைவிட்டு அகதிகளாக நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளுக்கு வந்துள்ளவர்களுக்கான உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நெல்லியடி பிரஜைகள் குழு நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் வீடு வீடாக அரிசி, பருப்பு போன்ற பொருட்களைச் சேகரிக்க ஆரம்பித்துள்ளது.

இவற்றுள் குழந்தைகளுக்குரிய பால் உணவு வகைகளும் அடங்கும்.

இப்பணியில் நெல்லியடி வர்த்தகர் சங்கமும், நெல்லியடி மாதர் சங்கமும், கந்தை வேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கமும் தங்கள் பூரண ஒத்துழைப்பை அளித்து வருகின்றன (இ-70)

## கொத்தணியின் கீழ் கொண்டுவரகோரிக்கை

மானிப்பாய்,ஏப்ரல் 21

கொத்தணி அமைப்பு முறைக்கு உள்ளாகும் வகையில் இப்பாடசாலையை அண்மித்துக் காணப்படுவதால் நவாலி பிரிவுக்கான கொத்தணிப் பாடசாலையாக இப்பாடசாலையை ஆக்கித் தரவேண்டும்.

நவாலி அட்டகிரி சைவத் தமிழ் வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுச் சபைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு நிறைவேற்றப்பட்டது

அதிபர் திரு இ வல்லிபுரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இப் பாடசாலை சூழலில் வாழ்ந்த பெரியார்களின் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் விஜயதசமி தினத்தன்று பரிசளிப்பு விழாவை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலை இல்லங்களுக்கு புலவர், பண்டிதர், கலையரசன்பெயர் வைப்பதற்கு கல்வித் திணைக்களம் வழங்கமுடியாத உதவிகளை பெற்றோர்கள் வழங்க முன்வர வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ-90)

### ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 21

கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகத்தின் எட்டாவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இம் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைபெற்றன.

தலைவர் திரு. இ. சிவலிங்கம் தலைமையில் 15 ஆம் திகதி இறுதி நாள் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன. (அ-10)

[illegible] அச்சுவேலி பகுதியில் [illegible] திருட்டுகள் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டரங்கு

### வெற்றி தோல்வி இல்லை

கரவெட்டி ஏப் 21

அண்மையில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டியில் சிறந்த வீரருக்கான கேடயத்தை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் ஈ. அருள்மோகனுக்கு நெல்லியடி கோட்டக் கல்வி அதிகாரி திரு வி. தம்பராஜா வழங்கினார்.

விக்னேஸ்வராக் கல்லூரி சார்பில் செல்வன் பாலகாந்தன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டி கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது (இ-எ-70)

## சிறுவர்களுக்கு சமய அறிவு

மானிப்பாய், ஏப் 21

உடுவில் சிவஞானப் பிள்ளையார் கோவில் சிவஞானவாரியம் சிறுவர்களிடையே சமய அறிவை வளர்க்க வெள்ளிக்கிழமை தோறும் சிறுவர்களுக்கான பேச்சு நிகழ்ச்சிகளை ஆரம்பித்துள்ளது

இப்பேச்சு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்பாக பேச்சு நிகழ்த்துபவருக்கு 'பால சிஷ்யை' என்னும் பாராட்டு வழங்கப்படும்.

கோவில் ஆதீன கர்த்தாவும், வாரியத் தலைவருமான பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மா தலைமையில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் திரு வி. யோகீஸ்வரன் இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்.

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அதிபர் திரு. கே. செல்வரட்ணம் இங்கு பேசுகையில், அமெரிக்கா போன்ற தேசங்களில் எல்லாம் சைவசமயம் வளர்ச்சியுற்று வருகிறது. எமது நாட்டிலும் இதுபோன்ற சமய ஸ்தாபனங்கள் சமயத்தை வளர்க்க முயல வேண்டும் என கூறினார். (இ-90)

### பிரார்த்தனை

சாவகச்சேரி, ஏப். 21

சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களின் நலன் வேண்டி பிரார்த்தனை நிகழ்ச்சி அறவழிப் பணிமனையில் நடைபெற்றது

அறவழிப் போராட்டக் குழுத் தொண்டர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ-31)

### சாவகச்சேரி சந்தைப் பகுதியில் திருட்டு

சாவகச்சேரி, ஏப். 21

சாவகச்சேரிச் சந்தையில் இரவு வேளைகளில் திருட்டுக்கள் நடைபெறுகின்றன.

பெட்டிக் கடைகளிலேயே இத்திருட்டுக்கள் நடைபெறுகின்றன என்று வர்த்தகர் சங்கம் நகராட்சி மன்றத்துக்கு புகார் செய்துள்ளது

இரவுக் காவலாளர்கள் இருவர் இருந்தும் இரு கடைகளிலும் சுமார் ஆறாயிரம் ரூபா பணமும் பொருட்களும் களவாடப்பட்டிருக்கின்றன. (இ-31)

## நோய் காரணமாக மிளகாய், பூசினி பயிர்கள் பாதிப்பு

கண்டாவளை, ஏப். 21

வடபகுதியில் மிளகாய், பூசினிச் செய்கைகள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

மிளகாய்ச் செடிகள் கருகி பிடிக்கின்றன. செடிகளும் வளர்ச்சி குன்றிக் காணப்படுகின்றன.

செடிகள் செழித்து கொப்புவிட்டு வளர்வதற்கு ஏற்பவே விளைவு அதிகரிக்கும்.

தண்ணீர் பற்றாக்குறையும் வரட்சியுமே இந்நோய்க்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

தனிச் செயற்கைப் பசளை போட்டுச் செய்கை பண்ணுவதும் நோய்க்குக் காரணம் ஆகும்.

பூசினிப் பயிருக்கு மஞ்சள் இலை நோய் கண்டுள்ளது.

இதனால் சில விவசாயிகள் தோட்டங்களை கைவிட்டுள்ளனர். (இ-120)

## மக்கள் முகம்

### கலாசாரப் பேரவை நிர்வாகிகள்

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கலாசாரப் பேரவை நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா தலைமையில் நடைபெற்றது.

தலைவர்: கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா (செங்கை ஆழியான்) துணைத்தலைவர்கள் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு. என். சோதிநாதன் கவிஞர் திரு எஸ் வீரசிங்கம்.

செயலாளர்: கவிஞர் நவகோபால், இணைச் செயலாளர்: உருத்திரபுரம் கொத்தணி அதிபர் பொன் சபாபதி

பொருளாளர்: உருத்திரபுரம் கிராம சேவகர் எஸ் தனபாலசிங்கம்.

11 பேர் கொண்ட நிர்

## முருங்கைத்தீவு தாக்குதல்: 90 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதம் என்று புகார்

மட்டக்களப்பு, ஏப். 21

மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள முருங்கைத்தீவு குடியேற்றக் கிராமத்தில் ஆயுதப்படையினரால் ஏற்படுத்தப்பட்ட சேதம் ரூபா 90 ஆயிரம் என்று பிரஜைகள் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது இச் சம்பவத்தில் 13 பேர் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.


இம் மாதம் 4 ஆம் திகதி மேற்படி கிராமத்துக்கு விரைந்த ஆயுதப் படையினர் குடிசைகளுக்கு தீ வைத்து உடைமைகளையும் சேதப்படுத்தியுள்ளதாக 7 பேர் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்கள்.

படையினரால் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டாலும் 9 பேரின் குடும்பங்கள் மட்டும்தான் தமது புகார்களை பதிவு செய்துள்ளன.

இறந்தோர் விபரம் வருமாறு:- இ. கணபதிப்பிள்ளை (22 வயது) க. கணபதிப்பிள்ளை (35 வயது) 4 பிள்ளைகள் உண்டு வி. மோகமாணிக்கம் (22 வயது) சி. பரிமளராசா (18 வயது) பி. அழகையா (22 வயது) சி. நடராசா (25 வயது) க. ரெத்தினசிங்கம் (22 வயது) மா. பத்மநாதன் (22 வயது) 2 பிள்ளைகள் உண்டு பூ. யோகராஜா (34 வயது) 3 பிள்ளைகள் உண்டு (இ-81)


## 2 ம் ஆண்டு நினைவஞ்சலி

சிவகுருநாதன் நித்தியநாதன் (தயா)



பிறப்பு: 08 - 09 - 1965 வீரகணக்கை: 21 - 04 - 1985

நித்தி நித்தி என்று நித்தம் அழைத்த நாம் நின்னை தடுமாறுகிறோம் நின் பிரிவால், ஆண்டு இரண்டு சென்றிடினும் ஆறுமா எம் உள்ளம்! இருள் சூழ்ந்த எம் தாயகத்தின் விடிவுக்காய் ஈந்தாய் உன் உயிரை. உன் ஆத்மா இனிதே சாந்தியடையட்டும்.

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

'சந்தன் அருள்'
இருபாலை, கோப்பாய். (1216)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
செல்வரத்தினம் - இரத்தினவேல்

தோற்றம்: 09 - 02 - 1921 மறைவு: 23 - 03 - 1987

மாண்புமிக்க இல்லத்தரசியே! செல்வமே,
பாசம்மிக்க அன்னையே - கருணையின் உறைவிடமே
எங்களோர் நெஞ்சம் நிறைந்த அன்புத் தெய்வமே
என்னை மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டாயே அம்மா!

நீங்கள் காட்டிய நன்னெறி வாழ்வின் வகைப்படி உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

22-4-87 புதன்கிழமை அதிகாலை நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரிகைகளிலும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள் உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்

கலைவுடையார் வீதி, வல்வெட்டித்துறை

கணவன், மக்கள், மருமக்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சின்னத்துரை - இராஜதுரை (பாபு)

மலேசிய மண்ணில் பிறப்பு: 1944 - 01 - 27 மலேசியக் காற்றுடன் கலப்பு: 1987 - 03 - 23

அன்பினாலும் பண்பினாலும் அனைவரையும் கவர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! விளையாட்டில் வீரராய் சமூகத்தின் சேவையாளராய் நாட்டிற்கும் வீட்டிற்கும் நற்பணி புரிந்த நல்லோரே! பிறந்த மண்ணும் மலேசியாவின் காற்றுடன் கலப்பதற்கா 'சென்று வருகிறேன்' என்று சொல்லிச் சென்றீரா ஐயா.

உங்கள் பிரிவால் வாடுகின்றோம்! உங்கள் நினைவால் ஏங்குகின்றோம்!!
எங்கள் வாழ்வு நீங்கும் வரை உங்கள் நினைவுகள் எம்முடனே...

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 1987-04-22 புதன்கிழமை காலை ஊறணியில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், மனைவி, மக்கள், உற்றார். (1218)

**உதய சங்கற்பம்**

ஒருவனுக்கு தெய்வ சிந்தனையை விட உலகிலே நல்ல துணை வேறு இருக்க முடியாது.

—ஓர் அறிஞர்.

உதயன்

இல. 13, சுதுமலை முதல் வீதி மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 24806, 22076

21-04-1987 த.செ.இல. 23

# எமது தலைமீது நாமே மண் போடலாமா?

குடா நாட்டில் மீண்டும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதாக அதிகாரிகள் குறைப்படுகிறார்கள்.

சட்டவிரோத மின்பாவனை பல வகைகளாலும் தீமை விளைவிக்க வல்லது. இது குறித்து ஏற்கனவே இப்பகுதியில் சில மாதங்களுக்கு முன்னரும் எழுதி இருந்தோம்.

அந்தந்தப் பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் ஊடாகவே மின் விநியோகம் நடைபெறுகிறது. மின்மாற்றியின் மூலம் குறிப்பிட்ட கிலோவாட் மின்சாரத்தைத் தான் விநியோகிக்க முடியும். அதற்கு மேலதிகமாக மின்சாரத்தைப் பாவித்தால் மின்மாற்றி வெடிக்கும்; பழுதடையும். மின்மாற்றி பழுதடைந்தால் குறிப்பிட்ட முழுப்பகுதியிலும் மின்விநியோகம் தடைப்படும்; அந்தப் பகுதி இருளில் மூழ்கும்.

மின்மாற்றியைத் திருத்துவது அல்லது மாற்றுவது என்பது இலகுவான காரியம் அல்ல. அதுவும் மின்மாற்றியைத் திருத்தவோ அல்லது புதிதாக ஒன்றை வாங்கவோ அரசாங்கம் இப்போது உள்ள சூழ்நிலையில் பணம் வழங்கும் என்பது குதிரைக் கொம்பு.

எனவே குறிப்பிட்ட அளவுக்கு மேலாக, சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பாவிப்பதால் சம்பந்தப்பட்ட பகுதி வாழ் மக்கள் அனைவருமே நிரந்தரமாக மின்வசதியை இழக்கும் ஆபத்து உண்டு.

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பாவிக்க எத்தனிக்கும் போது, மின்சாரத்தைக் கையாளுவதில் உரிய தொழில் நுட்பம் தெரியாமல் பலர் உயிரிழக்கும் ஆபத்தும் உண்டு.

எரிபொருள் தட்டுப்பாட்டால், பலரும் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பாவிக்கிறார்கள். ஆனால், அபிவிருத்தி சபைகளின் உப அலுவலகங்களினால் மேலதிகமாகப் பாவிக்கப் பட்ட மின்சாரத்துக்கு உரிய பணத்தைச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

மொத்தத்தில் மின் கட்டணத்தைச் செலுத்த முடியாத கஷ்ட நிலை உப அலுவலகங்களுக்கு ஏற்படுகின்றது. இறுதியில் செலுத்த வேண்டிய கட்டணம் சேர்ந்து சேர்ந்து நிலுவையாகி அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியாது தவிக்கிறார்கள்.

இப்போதுள்ள சூழ்நிலையில் நிலுவையைக் காரணம் காட்டி முழுக் குடாநாட்டுக்குமான மின் விநியோகத்தை அரசு நிறுத்தி விடலாம்.

ஏற்கனவே காரண காரியம் எதுவுமின்றி எரிபொருள் தடை, தொலைபேசித் தொடர்புத்தடை ஆகிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அரசுக்கு, கட்டண நிலுவையைக் காரணம் காட்டி மின்தடையைக் கொண்டு வருவது கஷ்டமான காரியமல்ல.

ஒரு சிலரின் வசதியைக் கருதி சட்டவிரோதமாக மின்சாரம் பாவிக்கப்படுவதால் முழுப்பிரதேசமே மின்வசதியை இழக்கும் ஆபத்து உண்டு என்பதை உணரவேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு சட்ட விரோத மின் பாவனையை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்த ஆபத்துக் குறித்து உரிய முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள். அந்தப் பிரசாரத்தின் தாற்பரியத்தை உணர்ந்து சட்டவிரோத மின்பாவனையைத் தடுக்க மக்கள் முழு மனதோடு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

உத்தரவின்றி மின்சாரம் பாவிப்பது சட்டவிரோதமானது மட்டுமன்றி இன்றைய சூழ்நிலையில் சமூக விரோதமானதும், தேச விரோதமான செயலுமாகும். இது குடா நாட்டு மக்கள் தமக்குத் தாமே செய்யும் கெடுதலும் ஆகும்.

வடபகுதி முழுவதற்குமான மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டால் பாரதூரமான பொருளாதாரத் தாக்கங்கள் உண்டாகும். என்பதை எவரும் மறந்து விடலாகாது.

அரசியல் உரிமைக்காகப் போராடும் காரணத்தால் ஏற்கனவே பொருளாதார ரீதியில் நசுக்கப்படும் தமிழர்கள், மேலும் பொருளாதாரத் தாக்கங்களை எதிர்கொள்ள முடியுமா? அந்தத் தாக்கத்தை 'நாமே உருவாக்கலாமா? எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடுவது தகுமா?

## எதிர் நீச்சல்போடும் தீவுப்பகுதி மக்கள்
### உதவி அரச அதிபர் கூறுகிறார்

தீவுப்பகுதியில் வாழும் மக்கள் பலவகைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழப் பழகியுள்ளனர். குடாநாட்டின் மற்றைய பகுதிகளோடு ஒப்பிடுகையில் தீவுப்பகுதி மக்களின் வாழ்க்கை கல்வி, விவசாயம் போன்றவற்றில் சூழலுக்கேற்ப பல வசதியீனங்களை எதிர்நோக்கி அவற்றுக்கெதிராக எதிர்நீச்சல்போடப் பழகியுள்ளனர்.

உதவி அரசாங்க அதிபரும் யாழ். அபிவிருத்தி சபையின் பிரதிச் செயலாளருமான திரு. தே. சபாபதிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பிரதம விருந்தினராக அவர் கலந்துகொண்டார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். சிவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. பி. பொன்னுச்சாமி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ-16)

## தாய்லாந்தில் பிரிட்டிஷ் அமைச்சர்

லண்டன், ஏப். 20

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜியப்ரி ஹோவ் பத்துநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று தாய்லாந்து புறப்பட்டார்.

இப் பயணத்தின்போது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கும் பிரிட்டிஷ் அமைச்சர் செல்வார்.

ரஷ்யத் தலைவருடன் பிரிட்டிஷ் பிரதமர் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை பிரிட்டிஷ் அமைச்சர் விஜயம் செய்யும் நாட்டுத் தலைவர்களிடம் எடுத்துரைப்பார். (இ-எ)

## கராச்சியில் இன மோதல்

கராச்சி, ஏப். 20

கராச்சியில் ஏற்பட்ட இன மோதல் சம்பவங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஏழு ஆக அதிகரித்தது.

பதான் இனத்தவருக்கும் மொஹஜீர் இனத்தவருக்கும் இடையே இம்மோதல்கள் மீண்டும் கடந்த வெள்ளி ஆரம்பமாகின. (இ-எ)

# ஆர்ஜன்ரீனாவில் நடந்த இராணுவக் கிளர்ச்சி
# 3 நாளில் கைவிடப்பட்டது

### ஜனாதிபதி நேரில் சென்று பேச்சு நடத்தியதன் விளைவு

புவனர்ஸ் அயர்ஸ், ஏப். 21

ஆர்ஜன்ரீனாவில் மூன்று நாள் கிளர்ச்சியில் ஈடுபட்ட சுமார் 150 அரசுத் துருப்புக்கள், ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் கிளர்ச்சியைக் கைவிட்டனர்.

கிளர்ச்சித் துருப்புக்களினால் கைப்பற்றப்பட்டு இருந்த ஆயுதப்படை முகாமுக்கு ஜனாதிபதி அல்போன்ஸின் நேராகச் சென்றார். கிளர்ச்சியில் ஈடுபட்டு இருந்த துருப்புக்களுடன் அவர் உரையாடினார்.

அதைத் தொடர்ந்தே கிளர்ச்சி கைவிடப்பட்டது. கிளர்ச்சி செய்த துருப்புக்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். அவர்கள் மீது நீதி விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இராணுவ ஆட்சியின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சில இராணுவ அதிகாரிகள் மீது தற்போதைய ஆட்சியாளர் மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் என்று கோரியே இத் துருப்புக்கள் கிளர்ச்சி செய்தனர்.

### அகதிகளைக் கொண்டு வரும் 5 விமானக் கம்பெனிகளுக்கு மேற்கு ஜேர்மன் எச்சரிக்கை

பொன், ஏப்ரல் 20

சட்டவிரோதமாக அகதிகளை நாட்டுக்குள் கொண்டுவரும் ஐந்து விமான சேவை நிறுவனங்களை மேற்கு ஜேர்மன் அரசு எச்சரித்துள்ளது.

இந்த ஐந்து நிறுவனங்களில் ஒன்று ஏயர் இந்தியா நிறுவனமுமாகும்.

இத்தகவலை மேற்கு ஜேர்மன் வார சஞ்சிகை 'ஜா' வெளியிட்டுள்ளது.

எச்சரிக்கையை மீறி சட்டவிரோத அகதிகளைக் கொண்டு வந்து இறக்கும் விமானசேவை நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

ஒவ்வொரு சட்ட விரோத அகதிக்கும் ஆயிரத்து நாற்றுப்பத்து டாலர் அபராதமாக விதிக்கப்படும்.

சம்பந்தப்பட்ட விமான சேவை நிறுவனமே இந்த அபராதத்தைச் செலுத்த வேண்டும்.

எச்சரிக்கை செய்யப்பட்டுள்ள ஏனைய விமான சேவை நிறுவனங்கள் வருமாறு; ஓரான்ஸா, எயர் பிரான்ஸ், ருமேனியா விமானசேவை, யூகோஸ்லேவியா விமானசேவை (இ-ா)

## தேர்தல்

ஜகார்த்தா, ஏப். 20

இந்தோனேசியாவில் எதிர்வரும் வியாழன் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

3 பிரதான கட்சிகள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றன. (இ-எ)

வெளி உலகில்

## மே தினத்தில் ராஜீவ் தமிழ் நாட்டில் பேசுவார்

சென்னை, ஏப்ரல் 20

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மே முதலாம் திகதி தமிழ் நாடு விஜயம் செய்ய இருக்கிறார்.

அன்று சேலம் மாநகரில் நடைபெற விருக்கும் மே தின விழாவில் பிரதமர் உரை நிகழ்த்துவார்.

இந்தியதேசியதொழிற் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி மேதினம் சேலம் மாநகரில் கொண்டாடப்பட விருக்கின்றது (இ-எ)

## லெனினின் மணிக்கூடு ஏலத்தில்

மியூனிச், ஏப். 20

லெனின் பாவித்த வெள்ளியிலான பாக்கட் மணிக்கூடு ஒரு லட்சத்து மூவாயிரம் டாலருக்கு ஏலம் போனது

1918 ஆம் ஆண்டு வரை லெனின் இந்த மணிக்கூட்டைப் பாவித்து வந்தார்

1918 ஆம் ஆண்டு அக்டோபரில் லெனின் இந்த மணிக்கூட்டை ஜேர்மன் கம்யூனிஸ்ட் தலைவர் கார்ல் லீப்நெக்ட் என்பவருக்கு அன்பளித்தார்.

1917 புரட்சியின் முன் இந்த மணிக்கூடு ரஷ்யாவின் ஸார் மன்னர்களின் பொறுப்பில் இருந்து வந்தது.

இந்த மணிக்கூட்டின் பின்பக்கத்தில் ஸார் மன்னனின் இலச்சினை பொறிக்கப்பட்டு இருந்தது.

தனது பாவனைக்கு எடுத்த பின்னர் லெனின் அரச இலச்சினை மீது சுத்தியல்-அரிவாள் சின்னத்தைப் பொறித்திருந்தார். (இ-எ)

## இறந்தோர் எண்ணிக்கை 13 ஆக உயர்வு

லக்னோ, ஏப். 20

உத்தர பிரதேசத்தில் மீரட் நகரில் கடந்த சில தினங்களாக நடந்த இந்து-முஸ்லிம் கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இம் மோதல் ஆரம்பமானது தற்சமயம் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் மீரட் நகரில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியாவில் ராம ஜன்மபூமி சம்பந்தமான பிரச்சினையே இந்து-முஸ்லிம் கலவரமாக வெடித்துள்ளது (இ-எ)

## இஸ்ரவேல் ஹெலி தாக்குதல்

டெல்அவிவ், ஏப். 20

இஸ்ரவேல் துருப்புக்கள் தென் லெபனானில் உள்ள கிராமம் ஒன்றில் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தின

பலஸ்தீன கெரில்லாக்களினால் இரண்டு இஸ்ரவேல் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாகவே இஸ்ரவேலின் ஹெலிகொப்டர் தாக்குதல் அமைந்தது என்று அறிவிக்கப்படுகிறது

பலஸ்தீன கெரில்லாக்கள் மறைந்து இருந்து தாக்கப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் கட்டடமொன்றின் மீதே இந்த ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டது (இ-எ)

## பாக். உதவி தொடருமாம்

இஸ்லாமபாத், ஏப். 20

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக்காரர்களுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவி வழங்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஆப்கானில் இருந்து ரஷ்யத் துருப்புக்கள் முற்றாக வெளியேறும் வரை இந்த உதவி கிளர்ச்சிக்காரர்களுக்குக் கிடைக்கும் என்று ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-எ)



பொய்யாமொழி

குறள்:

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

பொருள்:

எக்காலத்திலும் தன்னை மிக உயர்வாக எண்ணி வியந்து மதிக்கக் கூடாது; நன்மை தராத செயலைத் தான் விரும்பவும் கூடாது.

பாடசாலை அதிபர்களுக்கு

# இரட்டை வகுப்பேற்றம் குறித்துச் சுற்றறிக்கை

பலாலி, ஏப்ரல் 21

மாணவர்களின் இரட்டை வகுப்பேற்ற முறை பற்றிய விதிமுறைகள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஆண்டு 1, 2, 3 வகுப்புக்களில் எவ்வித காரணம் கொண்டும் இரட்டை வகுப்பேற்றம் நடைமுறைப் படுத்தப்பட மாட்டாது.

இந்த வகுப்புக்களில் செய்யப்படும் இரட்டை வகுப்பேற்றம் மாணவர்களின் விவேகத்திலும், கற்றலிலும் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணக்கூடும் என கல்வியலாளர்கள் கருதுகின்றனர்.

நான்காம் ஆண்டுக்கு (மேல் விவேக சக்தி ஐ கியூ) கூடிய மாணவர் ஒருவருக்கு இரட்டை வகுப்பேற்றம் கொடுக்க வேண்டுமானால் அது பற்றி கல்வி வட்டாரத்துக்குப் பொறுப்பாகவுள்ள கல்வி அதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

அவரால் மாணவரின் முன்னைய பெறுபேறுகள் விவேகத்தன்மை என்பன நன்கு பரிசீலிக்கப் பட்டே வகுப்பேற்றப் பட வேண்டும்.

சில பாடசாலைகளில் இந்த நடைமுறையைக் கவனிக்காது இரட்டை வகுப்பேற்றம் வழங்கப் பட்டதை அடுத்தே இது பற்றி அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (இ-119)

## வேலணைப் பகுதிக்கான கொங்கிறீட் மின்கம்ப தட்டுப்பாடு நீங்கும்

ஊர்காவற்றுறை, ஏப். 21

இலங்கை மின்சார சபையின் வேலணைப் பிராந்திய டிப்போவுக்குத் தேவையான கொங்கிறீட் மின்கம்பங்கள் விரைவில் கிடைக்கவுள்ளன.

இதனால் மின்பாவனையாளர்கள் பெருமளவு நன்மை அடைவார்கள்.

பண்ணைக்கு ஊடாகப் போக்குவரத்து சிரமமாக இருந்த வேளை யாழ்ப்பாணத்திலிருந்து லொறிகளின் மூலம் இப்பகுதிக்கு கொங்கிறீட் மின் கம்பங்கள் கொண்டு வரப்பட்டன.

போக்குவரத்து துண்டிக்கப்பட்டதை அடுத்து இப்பகுதியில் கொங்கிறீட் மின்கம்பங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. கடலூடாக இவைகளைக் கொண்டுவருவதில் பல கஷ்டங்கள் உள்ளதே இதற்குக் காரணம்.

தற்போது ஊர்காவற்றுறையிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்று கொங்கிறீட் மின்சாரக் கம்பங்களைத் தயாரித்து வருகின்றது.

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் தலைமை அலுவலகம் நூறு மின்கம்பங்களுக்கான கட்டளைகளை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. இவை விரைவில் வேலணை பிராந்திய டிப்போவுக்கு வழங்கப்படவுள்ளன. (உ-ள-16)

சமய சந்நிதிகளில்

## நுணுவில் மேற்கு துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில்

சாவகச்சேரி, ஏப்ரல் 21

சாவகச்சேரி நுணுவில் மேற்கு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் புதுவருடத் தினத்தை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருமுறை பாராயணம் அபிராமி அந்தாதி ஓதல் முதலான பக்தி பூர்வமான நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

மாலை அம்பாள் திருவீதி உலாவும் இடம் பெற்றது.

முதல் நாள் திருவிளக்குப் பூசையும் அதற்கு முன்தினம் பங்குனி உத்தரவிழாவும் சிறப்புற நடைபெற்றன. (இ-31)

### உற்சவம் முடிவு

சாவகச்சேரி, ஏப். 21

நுணுவில் மேற்கு கொலங்கிராய் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவங்கள் தொடர்ந்து பத்து தினங்களாக நடைபெற்று ... இடம் பெற்று தீர்த்த உற்சவங்களுடன் இனிது நிறைவுற்றன. (இ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★ செய்திக்கொத்து ★★★★★★

### அரச அதிபரிடம் கோரிக்கை

பருத்தித்துறை, ஏப். 21

அச்சுவேலி கதிரிப்பாயில் அமைக்கப்படவுள்ள உப-மின் நிலையத்தை, கதிரிப்பாய் டச்சு றோட்டிலுள்ள பொதுக் காணியில் அமைக்குமாறு வரியிறுப்பாளர் பொறுப்பாளர் திரு. ரி. பரஞ்சோதி யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைக் கேட்டுள்ளார். (இ-118)

### மாமன் - மருமகன் பிணக்கை தீர்த்த சிப்பாய்கள்

கிளிநொச்சி, ஏப். 21

மாமன் - மருமகனிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராற்றை தீர்த்து வைத்த சிப்பாய்கள் மாமனையும் மருமகனையும் கைகுலுக்கி இருவரையும் முத்தமிடவைத்த சம்பவம் அண்மையில் கிளிநொச்சியில் இடம் பெற்றது.

குடும்பத்தில் மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து மருமகனது உடைமைகளை மாமன் கொடுக்க மறுத்தாராம்.

இச்சம்பவம் குறித்து மருமகன் வீதியில் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிப்பாய்களிடம் முறையிட்டார்.

சிப்பாய்கள் மாமனிடம் உள்ள பொருட்களை மருமகனுக்கு கொடுக்கும்படி கூறியதுடன் இருவரையும் சமாதானம் செய்து முத்தமிட வைத்தனராம்.

இச் சம்பவம் பிரதான கண்டி வீதியில் இடம் பெற்றபோது பொது மக்கள் பலரும் பார்த்துக் கொண்டிருந்தனராம். (இ-ள-76)

### ஹோமியோபதி பரீட்சையில் சித்தி

பருத்தித்துறை, ஏப். 21

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி உத்தியோகத்தர்களான திரு. ஆர். பாலகிருஷ்ணன் திரு. ரி. பரஞ்சோதி, திரு. ஆர். பரமசாமி, திரு. ஆர். குலசேகரம் ஆகியோர் ஹோமியோபதி பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (இ-118)

### மட்டக்களப்பில் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு ஏப். 21

வெலிக்கடை சிறையில் தமிழ்க்கைதிகளின் உண்ணாவிரத போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது. (இ-21)

### இலவச பால்

பலாலி, ஏப். 21

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டு விழாக்களில் விளையாட்டு வீரர்களுக்கு குளிரூட்டப்பட்ட பால் இலவசமாக வழங்கப்படுமென 'மில்கோ நெஸ்லே' கம்பனி அறிவித்துள்ளது. (இ-191)

### மேலும் 175 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு, ஏப். 21

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட ஆயுதப் படை முகாம்களிலிருந்து மேலும் சுமார் 175 பேர் பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ-21)

வாசகர் திருமுகம்

## ஐ சி எம் ஏ பரீட்சையை ஏன் இங்கு நடத்த முடியாது?

ஐ சி எம் ஏ பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாது என்று பரீட்சை ஆணையாளர் கூறுவது புதிரானது

யாழ்ப்பாணத்தில் ஜீ சி ஈ பரீட்சைகள் மாத்திரமன்றி, லண்டன் பிற்மன் மற்றும் பொதுப்பரீட்சைகள், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பரீட்சைகள் என்பன தடையின்றி நடைபெறுகின்றன.

ஜீ சி ஈ பரீட்சைகள் எவ்வித அசம்பாவிதமும் இன்றி யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதையிட்டு பரீட்சை ஆணையாளரே பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

15 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்த ஐ சி எம் ஏ (தற்போதைய சி ஐ எம் ஏ) பரீட்சையை மட்டும் யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாது என்று பரீட்சை ஆணையாளர் கூறுவது புதிராக உள்ளது.

ஐ சி எம் ஏ நிறுவனம் யாழ்ப்பாண பிரபல கணக்காளர் திருஞானசம்பந்தருக்கு ஓர் கடிதம் அனுப்பியிருந்தது.

அதில் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆனால் பரீட்சை ஆணையாளரின் நிலைமை எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பரீட்சையில் தோற்றுவதற்காக அண்மையில் 500 மாணவர்கள் கொழும்பு செல்லப்பட்ட கஷ்டம் கொஞ்சம் அல்ல.

பல மாணவர்கள் இதனால் பரீட்சைக்கு தோற்ற முடியாது போனதும் உண்டு.

கணக்கறிஞர்களும், இப்பரீட்சையோடு சம்மந்தப்பட்டவர்களும், பொது நல ஸ்தாபனங்களும் பரீட்சை ஆணையாளருக்கு நிலைமையை விளக்கி அடுத்த பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஆவன செய்ய வேண்டும்.

பண்டத்தரிப்பு

எஸ். இரவீந்திரன்
கே. உதயகுமார்

